978 செப்டம்பர் 13]

அந்த ஆட்டோ ரிக்ஷாக்களை அந்த லோன் தீருவதற்கு முன்னாலே வேறு ஆட்களுக்கு விற்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி உரிமை வழங்கவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுச் சொன்னால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் கோவை, மதுரை நகரங்களில் உள்ள ஆட்டோக்கள் மீட்டர் இல்லாமல் ஓடுவதால் பொதுமக்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே அவைகளுக்கு மீட்டர்கள் பொருத்தி பொதுமக்களுக்கு வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கின்ற ஆட்டோக்களை அவர்கள் வாங்கிய கடன்களை அடைத்த பிறகுதான் அந்த உரிமையை மாற்றமுடியும். அதை மீறி மாற்றி இருப்பார்களானால், உறுப்பினர் கொடுக்கின்ற தகவலின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். கோவை, மதுரை போன்ற நகரங்களில் மீட்டர் போடவில்லை. அதனால் பொதுமக்களுக்குத் தொல்லைகள் தருகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கும் வந்திருக்கின்றது. அதன்பேரில் கடுமையான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது. அந்தக் குறைபாடுகளை விரைவிலே களைவோம் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

நாவலூர்-கொட்டப்பட்டியில் விவசாயப் பாலிடெக்னிக்.

* வினா எண் 192—திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாவலூர்-கொட்டப்பட்டியில் ஒரு விவசாய பாலிடெக்னிக் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) & (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவலூர் குட்டப்பட்டு என்னும் கிராமத்தில் குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையம் ஒன்று 1977-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ம் நாளிலிருந்து நடைபெற்று வருகிறது. விவசாயப் பாலிடெக்னிக் அமைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவர் அவர்களே, இந்த விவசாய பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே' ''விவசாய பாலிடெக்னிக்'' ஆரம்பிக்கவில்லை. குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையம்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது பாலிடெக்னிக் அல்ல. அந்த குமரப்பெருமாள் பண்ணை அறிவியல் நிலையத்திற்கு ஏறத்தாழ 150 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது.

காந்திபுரம்-காரவள்ளி சாலை.

* வினா எண். 193— திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள காந்திபுரம்—காரவள்ளி சாலைக்கு (சுமார் 11 கி.மீ.) கரும்பு வளர்ச்சி நிதியிலிருந்து தார் போடுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக்காலமாக அந்த சாலை சீர்படுத்தப்படாமல் இருந்து தற்போது அதைச் சீர்படுத்த உத்தரவிட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கரம்பக்குடி ஒன்றியப் பகுதியில் பாசன வசதி

* வினா எண். 194—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி யூனியன் பகுதியிலுள்ள உழவியல் கால்வாயிலிருந்து மேலும் 8,000 ஏக்கர்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு பல ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதனை துரிதப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. த. புஷ்பராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி மிகவும் பின்தங்கிய யூனியன். இந்தத் திட்டத்தில் 8,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதால் அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா?